ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

වෙළඳපොළ මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
சந்தைத் தொழிற்பாடுகள் திணைக்களம்
MARKET OPERATIONS DEPARTMENT

අභ්‍යන්තර ලිපිය
உள்ளக விஞ்ஞாபனம்
Internal Memorandum

**2026ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க சுற்றறிக்கை**

2026 மே 29

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிறுவனங்களுக்கும்

**துணைநில் வைப்பு வசதிக்கான வெட்டு நேரத்தினை திருத்தியமைத்தல்**

இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களத்தின் பணிப்பாளரால் 2026 மே 29ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 2026ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை சுற்றறிக்கையின் பிரகாரம், 2026 யூன் 01ஆம் திகதி நடைமுறைக்கு வரும் விதத்தில், துணைநில் வைப்பு வசதிக்கான ஏற்புடைய வெட்டு நேரம் 1600 மணி ஆக திருத்தப்பட்டுள்ள அதேவேளை, துணைநில் கடன்வழங்கல் வசதிக்கான ஏற்புடைய வெட்டு நேரம் 1530 மணி ஆக மாற்றமின்றி காணப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.

அதற்கமைய, சந்தைச் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட திரட்டப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மீதான 2021ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சுற்றறிக்கையின் 31ஆம் வாசகமானது இச்சுற்றறிக்கையின் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஆகையினால், பங்கேற்கும் அனைத்து நிறுவனங்களும் திருத்தப்பட்ட துணைநில் வைப்பு வசதிக்கான வெட்டு நேரத்துடன் இணங்கியொழுகுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**முனைவர்.**
**ஆர். ஏ. அனில் பெரேரா**
**பணிப்பாளர்/ சந்தைத் தொழிற்பாடுகள்**

011-2477036 011-2477783 dmod@cbsl.lk www.cbsl.gov.lk